**பொல்கஹவெல பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொல்கஹவெல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து பொல்கஹவெல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான ரூபா 1,474,427 பெறுமதியான கடன்கொடுத்தோர் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் காணப்பட்ட மின்சார பொருள் இருப்பு ரூபா 132,690 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் மீண்டும் பிழையாக ரூபா 396,827 மின்சார இருப்பிற்கு வரவு வைத்ததன் காரணமாக | கணக்கீடு செய்யும் போது இடம்பெற்ற பிழை அடுத்துவரும் காலங்களில் சரி செய்யப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மின்சார இருப்பு ரூபா 529,517 ஆல் அதிகரித:து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் போது 2023 ஆம் ஆண்டு தொடர்பாக பெற்றுக்டிகாள்ளப்பட்ட ரூபா 56,955 பெறுமதியான கடை வாடகை வருமானமானது நடைமுறைப்பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானங்களை மாதாந்த கூற்றில் உள்ளடக்காமையால் கணக்குகளிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (ஈ) | சிறுவர் பூங்காவில் படகு ஓட:டுவதற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த நீர் தடாகத்தின் செலவான ரூபா 1,064,497 மூலதனமாக்கப்பட்டிருக்கவில் லை. | சிறுவர் பூங்காவில் படகு ஓட்டுவதற்காக நீர் தடாகத்தினை நிர்மாணித்த பெறுமதியை அடுத:துவரும் காலத்தில் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். . | நீர்த்தடாக செலவு மூலதனமாக்கப்படுதல் வேண்டம். |
| (உ) | மீளாய்வாண்டின் போது மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட ரூபா 1,100,000 பெறுமதியான 05 நிர்மாண வேலைகள் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்காததுடன் 2022 ஆம் ஆண்டிற்கான கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குழுவின் அங்கீகாரத்தின் பின்னர் இந்த நிர்மாண வேலைகளுக்குரிய பெறுமதியான ரூபா 1,100,000 பணம் கடன்கொடுத்தோர் பதிவேட்டிலிருந்து நீக்கப்படும். | உடன்படிக்கை செய்யப்படாத கடன்கொடுத்தோராக நிர்மாண வேலைகள் கணக்கீடு செய்யாதிருத்தல் வேண்டும். |
| (ஊ) | வீரம்புகெதர செயலகத்தினால் 2020 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 02 நிர்மாண வேலைகள் தொடர்பான ரூபா 329,770 தொகை பிரதேச சபையின் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த இரண்டு நிர்மாண வேலைகள் தொடர்பான ரூபா 329,770 பணம் தவறுதலாக கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்துடன் அப்பிழையை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (எ) | அரங்கம சிறீ போதிருக்காராம விகாரைக்கு செல்லும் புதிய பாதைக்கு கொங்கிரீட் இடுவதற்கான இறுதிக் கொடுப்பனவு ரூபா 295,437 ஆக இருந்த போதிலும் அது ரூபா 495,143 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இதற்குப் பின்னர் செலுத்த வேண்டிய சரியான பணத்தை கடன்கொடுத்தோர் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | ஒரு நிர்மாணச் செயற்திட்டத்திற்காக கிடைக்க வேண்டிய பணம் ரூபா 43,241 மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்தும் இன்னும் கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோராக பிழையாக பதியப்பட்டிருந்தது. அதனை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |
| (ஐ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ள ரூபா 151,160 பெறுமதியான வைப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண வேலை நிருவாக வைப்புக்கள் ரூபா 151,160 பணத்தை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு தவறவிடப்பட்டன. | வைப்பு மீதியினை சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |

### 1.6.2 கணககிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மொத்தமாக ரூபா 72,242,020 தொகையான 21 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகளுக்கும் பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்குமிடையே ரூபா 18,848,707 வித்தியாசம் காணப்பட்டது. | பட்டோலைக்கு இணங்கவும் நிதிக்கூற்றுக்களுக்கு இணங்கவும் மீதிகளில் காணப்படுகின்ற வித்தியாசத்தை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 371 | 2022 ஆம் ஆண்டின் போது முற்பணங்களாக 56 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட | இதன் பின்னர் முற்பணங்கள்களை பெற்றுக்கொள்ளல் தீர்த:துவைத்தல் தொடர்பாக | மேற்கூறிய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். . |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முற்பணங்களைக் தீர்த்துவைப்பதற்கு 21 நாட்களிலிருந்து 332 நாட்கள் வரையான கால தாமதம் இடம்பெற்றிருந்தது. | கண்காணிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2019 ஏப்ரல் 22 ஆந் திகதிய வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அறிக்கையின் 18(vi) ஆம் பிரிவு | கடைகளை குத்தகைக்கு பெற்றுக்கொண்ட 06 நபர்களினால் குத்தகைப் பணத்தினை நீண்டகாலமாக செலுத்த தவறியிருந்த போதிலும் சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை சட்டரீதியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 3,076,126 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 98,499,491 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2021 மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | 2021 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீத வரியும் வரியும் | 12,676 | 103,131 | 8,276 | 2,036 | 8,221 | 8,155 | 5,207 | 16,419 |
| வாடகை | 1,131 | 6,531 | 6,121 | 409 | 1,354 | 5,763 | 5,590 | 173 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 500 | 358 | 358 | - | 500 | 323 | 323 | - |
| ஏனைய வருமானம் | 72,379 | - | 108,536 | - | 66,900 | - | 17,114 | - |
| மொத்தம் | 86,686 | 110,020 | 123,291 | 2,445 | 76,975 | 14,241 | 28,234 | 16,592 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **வீதவரி** | | |
| மீளாய்வாண்டின் இறுதியில் 05 ஆண்டுகளை மிகைத்திருந்த வீதவரி நிலுவை மீதி ரூபா 3,989,545 ஆகும். | நிலுரைவயான வீதவரியினை அறவீடு செய்யும் நடமாடும் நிகழ்ச்சித்திட்டங்கள் 2023 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத இறுதி வாரத்திலிருந்து அமுல்ப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் மிகவும் விரைவாக நிலுவையான வீத வரிப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையான பணத்தை அறவீடு செய்வதற்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| **ஏக்கர் வரி** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய ஏக்கர் வரி நிலுவை ரூபா 83,873 ஆகும். | ஏக்கர் வரிக்காக மீளாய்வினை மேற்கொண்டு பதிவழிப்பதற்கு இயலுமை காணப்படும் பணத்தை பதிவழிப்பதற்கும் மிகுதியான பணத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**வாடகை**

| | | | |
|---|---|---|---|
| **(அ)** | பொதுச் சந்தை கடைகளை செயற்படுத்திவந்த 07 நபர்களுக்கு தற்காலிகமாக வழங்கியுள்ள கடைகளிலிருந்து 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிட வேண்டிய நிலுவைக் கடை வாடகை ரூபா 199,760 இனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தி வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை ஏடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | தொழில்சார் அதிகார சபை செயற்படுகின்ற கட்டிடத்திற்காக மதிப்பீடு செய்த வாடகையினை விட குறைந்த வர்டகை அறவீடு செய்யப்பட்டதனால் ரூபா 792,000 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | ரூபா 649,130 நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனங்களை குத்தகைக்கு வழங்கும் போது மதிப்பீட்டு பெறுமதியை அடிப்படையாகக் கொள்ளுதல் வேண்டும். |
| **(இ)** | சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக நீண்டகாலமாக காணப்பட்டு வரும் ரூபா 1,575,614 குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**அனுமதிப்பத்திர கட்டணம்**

| | | |
|---|---|---|
| பிரதேச சபை சட்டவிதி 61 இன் பிரகாரம் வருடாந்த மீளாய்வினை மேற்கொண்டு பெற்றுக்கொள்ளப்படுகின்ற பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகள் அனைத்தும் நிர்மாண வேலைகள் தொடர்பான வரிப் பதிவேட்டிலும் வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர கட்டணப் பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் கட்டணங்களைச் செலுத்திய வியாபாரங்களை மாத்திரம் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டிற்கு பட்டியலிடப்பட்ட வருமானம் 1,100,000 | 2023 ஆம் ஆண்டின் போது பிரதேச சபை சட்டவிதி 61 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மீளாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஆண்டின் ஆரம்பத்தில் முறைப்படியாக மீளாய்வினை மேற்கொண்டு வியாபார வரியினையும் அனுமதிப்பத்திர கட்டணத்தையும் அறவீடு செய்தல் வேண்டும். |

ஆக இருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டில் அது ரூபா 500,000 வரை குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 குறிக்கோளுக்குப் புறம்பான செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பௌதீக திட்டத்தில் வீதிகளையும் காணி கட்டிடங்களையும் திருத்தம் செய்தல் மற்றும் பராமரிப்பதற்காக ரூபா 46 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 6,953,617 பெறுமதியான 18 நிர்மாண வேலைகள் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளையும் இலக்குகளையும் பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். . |

### 3.2. முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) கொடவெல வாராந்த சந்தை உணவுச்சாலையானது 1996 ஆம் ஆண்டிலிருந்து உடன்படிக்கை செய்யப்பட்டு வாடகை அடிப்படையின் கீழ் ஒரு நபரினால் நடாத்தப்பட்டு வந்திருந்ததுடன் அடிக்கடி குத்தகை காலத்தினை நீடித்து 2021 ஆகஸ்ட் 30 ஆந் திகதி குத்தகை உடன்படிக்கை காலம் முடிவடைந்திருந்ததுடன் குத்தகை ஆதனங்களின் குத்தகை காலம் முடிவடைகையில் அந்த ஆதனத்தை கேள்வி கோரி மீண்டும் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேணடிய போதிலும் அதற்கு முரணாக 2021 மே 04 ஆந் திகதி நிதிக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் முதலமைச்சரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு 2021 ஆகஸ்ட் 31 ஆந் | கொடருவல வாராந்த சந்தையின் உணவுச்சாலைக்காக 2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதியிலிருந்து 03 ஆண்டுகளுக்கு உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டுள்ளது . | முறைப்படியாக குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதியிலிருந்து இன்னும் 03 ஆண்டுகள் காலத்திற்காக மேலே காட்டிய நபருக்கே வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2023 சனவரி 30 ஆந் திகதி வரை பிணைப் பணமான ரூபா 80,000 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,400 பணமும் அறவிட்டு உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | உஃஹுமீய பல்நோக்கு கட்டிடங்களின் நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டு 2021 திசெம்பர் 24 ஆந் திகதி சபைக்கு ஒப்படைக்கப்படாமை காரணமாக குத்தகைக்கு வழங்கி சபையினால் அறவிடக்கூடியதாகவிருந்த ரூபா 1,040,000 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | கட்டிடத்திற்கு மின்சாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு மின்சார சபையிடம் தேவையான உபகரணங்கள் இல்லாமையின் காணரமாக நிர்ணயிக்கப்பட்டவாறு கடையை குத்தகைக்கு வழங்க முடியாதிருந்தது. | சபைக்கு வருமானத்தை உழைக்ககூடிய வழி என்பதனால் துரிதமாக வேலையை பூர்த்தி செய்து குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேணடும். |
| (இ) | ரூபா 19,244,563 செலவு செய்து பொல்கஹவெல உஹுமீய பல்நோக்கு கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணி குருனாகல் மாவட்ட காணி மறுசீரமைப்பு அதிகார சபையின் காணியாக உள்ளதுடன் 2023 சனவரி 30 ஆந் திகதி வரையும் அக்காணியை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்காணியை சட்டரீதியாக ஒப்படைக்குமாற வீரம்புகெதர பிரதேச செயலகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க பிரதேச செயலகத்தின் மூலம் உள்ளூராட்சி ஆணையாளரின் இணக்கப்பாட்டினைப் பெற்ற உடன் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணியை துரிதமாக பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | வீதவரி மதிப்பீடானது 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்பட்ட வேண்டிய போதிலும் பொல்கஹவெல பிரதேச சபையினால் கடைசியாக 2014 ஆம் ஆண்டிலேயே வீதவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. | 2020 ஆம் ஆண்டின் போது வீதவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இன்றுவரை அந்த புதிய புதிய மதிப்பீட்டு அறிக்கை கிடைக்காமையின் காரணமாக 2014 ஆம் ஆண்டிற்கான வீதவரி | நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வீதவரி மதிப்பீட்டினைசெய்து கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு 2022 ஆம் ஆண்டில் வீதவரி அறவீடு மேற்கொள்ளப்பட்டது. | |
| (உ) | 2015 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டுவரை வழங்கப்பட்ட 112 இணக்கப்பாட்டு சான்றிதழ்களின் மதிப்பீட்டினைப் பெற்றுக்கொண்டு வீதவரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 112 இணக்கப்பாட்டு சான்றிதழ்களுக்குரிய அலகுகளின் மதிப்பீட்டினைப் பெற்று வீதவரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை எங்களின் தவறாகும். | உரிய ஆதனங்களை மதிப்பீடு செய்து வீத வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | பிரதேச சபையின் பொல்கஹவெல கேகாலை வீதியில் அமைந்துள்ள காணியில் தேனீர் கடையை நடாத்துவதற்கு வெளித்தரப்பினர்களுக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்கும் போது அதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி தற்காலிகமாக தேனீர்கடை மற்றும் பழக்கடையை நிர்மாணித்து நடாத்துவதற்காக 2015 மே 11 ஆந் திகதிய குழுத் தீர்மானத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 மே 11 ஆந் திகதியின் பின்னர் இந்த உடன்படிக்கை செல்லுபடியற்றதான போதிலும் 2022 மே 01 ஆந் திகதி வரை முறைப்படியான உடன்படிக்கையின்றி தேனீர் கடையை நாடாத்துவதற்கு சபையினால் வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. | .இக்கடை நீண்டகால குத்தகைக்கு வழங்கப்படாததுடன் 02 ஆண்டுகளுக்காக 2015 மே 11 ஆந் திகதி குழுவின் சிபாரிச மற்றும் பொதுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 02 ஆண்டுகளுக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 02 ஆண்டுகளுக்கு 02 ஆண்டுகள் இந்த உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டுள்ளது. | முறைப்படியாக குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும |

## 04. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1. செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| பிரதேச சபையினால் 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போது ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள் தொடர்பான உள்ளபடியான செயற்பாடுகளை இனங்கண்டு கிரய மதிப்பீட்டினைத் தயாரித்து அதற்கிணங்க திட்டங்கள் தயாரிக்கப்படாது பெயரளவிலான (Dummy) செயற்பாடுகளக்காக நிதி ஏற்பாடு மதிப்பீடு செய்யப்பட்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க சபையின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |